**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு**

**வழக்கு எண்.சி.சி.எண்.75/2021**

**வழக்கு சாட்சி.அ.சா.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமச்சந்திரன் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | ஈஸ்வரன் | வயது | : | |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |

(வழக்கின் எதிரி ஆஜர் இல்லை. எதிரியின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.04.2025**

முதல் விசாரணை

நான் தற்போது காளிங்கராயன்பாளையத்தில் குடியிருந்து கொண்டு, ஆட்டோ ஒட்டி வருகிறேன்.

சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் உதவி ஆய்வாளர் வேலுமுத்து என்பவர் என்னை அழைத்ததன் பேரில், நான் காவல் நிலையம் சென்றேன். அப்போது செயின் திருட்டு சம்மந்தமாக ஒரு வழக்கில் என்னை சாட்சியாக இருக்க சொன்னதன் பேரில், நான் கையொப்பம் செய்தேன். நீதிமன்றத்தில் தற்போது என் முன்னிலையில் காண்பிக்கப்படும் எதிரி சுரேஷ் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். எதிரி சுரேஷ் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி

கையொப்பம் என்னுடையதுதான். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ**.**சா**.**ஆ**.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நீங்கள் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று உங்களுக்கு தெரியாது என்று சொன்னால், சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் கையொப்பம் செய்தீர்கள் என்றால், சரிதான்.

எதிரி தரப்பு மறு விசாரணை

இல்லை.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

Judicial Magistrate No.III,
Erode.